மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சிலைகள் திருடப்படுவதைத் தடுக்கவும், விலையுயர்ந்த நகைகள் களவாடப் படுவதைத் தவிர்க்கவும், அவற்றைப்பாதுகாப்பதற்கும் தனிப் பட்ட முறையில் ஆங்காங்கு ஏற்பாடுகளை தற்போது அதிகாரிகள் செய்து வருகிறார்கள். முக்கியமான விலை உயர்ந்த சிலைகளை யெல்லாம் போட்டோ எடுத்து அவற்றைப் பத்திரமாகப் பாது காத்து வைத்து இருக்கிறோம். இந்தச் சிலைகள் காணமல் போனால் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு இது உதவியாக இருக்கும். அதோடு அவ்வப்போது தேவைப்படுகிற நடவடிக்கைகளை அந்தத் துறையின்மூலம் செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் கேள்விகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் அவையுரிமைபற்றிய பிரச்னைக்கு நோட்டீஸ் கொடுத்து இருக் கிறார்கள். அது என்னுடைய பரிசிலனையில் இருக்கிறது. அது முடிந்ததும், அதைப்பற்றிய முடிவை நான் அறிவிக்கிறேன்.

(4) ஒத்திவைப்புத்தீர்மானங்கள்.

(அ) மாணவர்மீது காவல் துறையினரின் தடியடிப் பிர யோகமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும்.

(ஆ) திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி மாணவர்கள் தேசியக் கல்லூரி மாணவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்படும் செய்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு, திரு. அழகர்சாமி, ஆகியோர்கள் தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் ஓர் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தைக் கொடுத்து அதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

அதாவது—

"பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் மாணவர்களுக்குப் பிரதி நிதித்துவம் கோரியும், பட்டமளிப்பு விழாவினை ரத்துச் செய்யக் கூடாதென்று கோரியும் 3—12—1971-ல் சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர்களின் சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை யொட்டி, மாநிலக் கல்லூரி முன்பும், எழிலகத்தின் அருகிலும்